முருகப்பெருமான் துணை

**மகான் பிடிநாகீசர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**21.03.2024,** வியாழக்கிழமை

1. போதும் போதும் கலிநாயகனே
பொய்புரட்டு களவு மாயையென
ஆதரவிலா அல்லல் கரம்நீட்டி
அழிக்கின்ற துன்பம் போதுமப்பா
2. அப்பனே மக்களிடை தெளிவு
ஆபத்தென உணர்ந்து திருந்த
காப்புத் தாருங்கள் எனவேண்டி
கந்தனே அரங்கனாய் வந்துள்ள
3. வந்துள்ள அவதாரம் போற்றி
வாரீர் காப்பீர் எனவேண்டி
சிந்தைபட துல்லிய ஆசிதனை
சோபகிருது சேல்திங்கள் தன்னில்
4. தன்னிலே அட்டமதிகதி குருவாரம்
(சோபகிருது வருடம் பங்குனி மாதம் 08ம் நாள், 21.03.2024, வியாழக்கிழமை)
தக்கபடி பிடிநாகீசரும் உரைப்பேன்
மண்ணுலகில் மாபாதகங்கள் பெருகி
மனிதனே கட்டுப்படா வண்ணம்
5. வண்ணமுடன் தீவினை பெருகி
வதை உயிர்மேல் கண்டுவர
எண்ணம் தூய்மை கண்டிட
இறைசிந்தை ஞானத் தெளிவு
6. தெளிவுகண்டு பாதகம் நீக்கி
தெய்வநிலை அடைந்து உயர
அழிவில்லா பாதுகாப்பை பெற
அபயமென மெய்ஞானம் அருளும்
7. அருளும் அரங்கமகா ஞானியின்
ஆற்றல்மிக்க பிரணவக்குடில் நாடி
வரமாகத் தீட்சை உபதேசம் பெற
வணங்கி அரங்கன் சீடரென

8. சீடரென வல்லமையான அடையாளம்
செகத்தில் மானிடா கண்டுவிட
இடரான அனைத்து மாயைதனை
இலகுவாய் கடந்து தேறுவாய்

9. தேறுவாய் பாதுகாப்பு மிகுந்த
தேசிகன் ஆசிபலம் கொண்டவனாய்
வருவாய் தன்னில் தருமத்தில்
வாரி வழங்கி வள்ளலாக

10. ஆகவே தன்குணம் மாற்றி
ஆக்கினை அனைத்தும் வென்று
மகானாய் மானிடா மாற்றமதை
மகான் அரங்கனால் அடைவாய்

11. அடையவே அனைவருக்கும் வாய்ப்பு
அளித்து அரங்கன் அருளிவர
தடையற உலகோர் ஏற்றுவர
தரணிக்கே பெரும்பாதுகாப்பாய் மாறும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–